# தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

**முன்னிலை. திருP.சிவஞானம், எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ம் நாள் புதன்கிழமை

**I.D.No.49/2023**

**CNR No.TNKP18-000071-2023**

D.உதயகுமார், (வயது-39, E.No.0710002)
த/பெ.தாஸ்,
எண்.4/106, பால்வாடித்தெரு,
பாரிவாக்கம்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056. ...... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம்,
Daeseung Auto Parts India Private Limited,
எண்.474, மண்ணூர் கிராமம்,
வளப்புரம் அஞ்சல்,
ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் - 602 105. ...... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 07.07.2023 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரர் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திரு.S.குமாரசாமி, M/s.K.பாரதி, திரு.K.சுரேஷ், M/sN.K.நிவேதா மற்றும் திரு.J.மோகன்ராஜ் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்றம் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்வம்</u>

1 மனுதாரரின் வேலை நீக்கம் அநியாயமானதென்றும் அவரை எதிர்மனுதாரர் நிர்வாகம் பின்சம்பளம்,பணிதொடர்ச்சி மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்க உத்தரவு செய்யப்பட வேண்டும் என்று கோரி தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழ் இவ்வழக்கு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.) மனுதாரர் தரப்பில் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் எதிர்மனுதாரரின் பன்னாட்டு நிறுவனத்தில் 03.10.2007 முதல் Production பிரிவில் நிரந்தர தொழிலாளியாக எந்தவிதமான குற்றமும், குறையுமின்றி பணிபுரிந்து வந்தார். அவரின் கடைசி மாதச்சம்பளம் ரூ.55,600/- ஆகும். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் 18.08.2022 தேதியிட்டு தற்காலிக பணி நீக்க கடிதம் அளித்தது. அதில் தேவகுமார் என்ற தொழிலாளி சட்டவிரோதமாக நிறுவன உதிரி பாகங்களை நிறுவனத்திற்கு வெளியே எடுத்து செல்லும் போது காவல் துறையால் கைது செய்யப்பட்டு, நிறுவனத்திற்கு தகவல் சொல்லியதாகவும் நிர்வாகம் உள்விசாரணை செய்ததில் ஒரு நபர் எழுத்துபூர்வமாக வாக்குமூலம் அளித்ததில் மனுதாரரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற செயல் பல வருடங்களாக செய்து பணம் சம்பாதித்து மோசடி, கையாடல் போன்ற குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சொல்லி காரணம் கூறப்பட்டது. மனுதாரர் 20.08.2022 மற்றும் 22.08.2022 ஆகிய தேதிகளில் குற்றச்சாட்டுகளை மறுத்து கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதங்களில் வாக்குமூலம் அளித்த நபர் யார் என்று தெரிவிக்காமல் தற்காலிக பணி நீக்கம் செய்திருப்பது சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டிருந்தார். எதிர்மனுதாரர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை மனுதாரர் மறுத்ததினால் 30.09.2022 அன்று நிர்வாகம் மனுதாரர் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் குற்றச்சாட்டு குறிப்பாணையும் வழங்கியது. அத்துடன் மனிதவள மேலாளர் திரு.பாக்கியராஜ் அளித்த பிரமாண வாக்குமூலம் மற்றும் திரு.வனராஜ் அளித்த கடிதம் உட்பட சில ஆவணங்களை விசாரணையில் வழங்கியது.

மனுதாரர் 03.10.2022 தேதியிட்ட கடிதத்தில் நிர்வாகம் ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதால் தன்னால் படிக்க இயலாததால் அனைத்து ஆவணங்களையும் தமிழில் அனுப்புமாறு கூறினார். மேலும் 30.09.2022 அன்று நடந்த விசாரணை நடவடிக்கைகள் குறிப்புகள் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. தமிழில் ஆவணங்கள் இருந்தால் பாக்கியராஜ் மற்றும் வனராஜ் ஆகியோரை குறுக்கு விசாரணை செய்ய இயலும். பல தேதிகளில் நடந்த விசாரணையில் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்று பல கடிதங்கள் மூலம் கோரியிருந்தார். 30.09.2022, 06.10.2022 மற்றும் 14.10.2022 ஆகிய கடிதங்களை ஆவணமாக குறியீடு செய்ய விசாரணை அதிகாரியிடம் வாய்ப்பு கேட்ட போது அவர் குறியீடு செய்யவில்லை. 14.10.2022 அன்று வனராஜ் மற்றும் பாக்கியராஜ் ஆகியோரை குறுக்கு விசாரணை செய்த போது விசாரணை அதிகாரி இன்றைய தினமே விசாரணை முடிக்க வேண்டும் என்று கூறி மனுதாரர் மீண்டும் வாய்ப்பு கேட்ட போதும் வாய்ப்பு அளிக்கவில்லை. விசாரணை குறிப்புகள் அந்தந்த தேதிகளில் வழங்கப்படவில்லை. விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாக நடந்து கொண்டதாக கூறி மனுதாரர் உரிய வாய்ப்புகள் வழங்க கோரியிருந்தார். நிர்வாகம் 01.11.2022 அன்று 2வது காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பி அத்துடன் 29.10.2022 தேதியில் விசாரணை அறிக்கை வழங்கியது. அதற்கு மனுதாரர் அளித்த பதில் கடிதத்தில் விசாரணை அறிக்கை தமிழில் வழங்கப்படவில்லை. விசாரணை குறிப்புகளில் நிர்வாகத்தின் கையெழுத்தில்லை. விசாரணை எப்படி நடந்தது என்று மனுதாரர் கொடுத்த கடித்தத்திற்கு நிர்வாகம் பதிலளிக்காமல் இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பாக விசாரணை நடத்தப்பட்டும், குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமல் 29.10.2022 தேதியில் விசாரணை அறிக்கை வழங்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளாமல் பின்சம்பளம், பணிதொடர்ச்சி மற்றும் இதர பயன்களுடன் வேலை வழங்குமாறு கேட்டுள்ளார். நிர்வாகம் மனுதாரரை 12.11.2022 தேதியில் வேலை நீக்கம் செய்யப்பட்டார். மனுதாரர் 16.11.2022 அன்று வேலை நீக்கத்திற்கு எதிராக சமரச அதிகாரி முன்பு மனு தாக்கல் செய்தார். அதற்கு

நிர்வாகத்தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ததற்கு மனுதாரர் அளித்த மறுப்புரையில் பொய்யான குற்றச்சாட்டுகளை மறுத்திருந்தார். இந்நிலையில் 06.01.2023 அன்று சமரச முறிவறிக்கை வழங்கப்பட்டது. மனுதாரர் வேலை நீக்கத்திற்கு பிறகு வேலையில்லாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார். எனவே மனுதாரருக்கு எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவை ரத்து செய்து மனுதாரருக்கு பணிதொடர்ச்சியுடன், பின் சம்பளம் மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்க உத்தரவு செய்யப்பட வேண்டும் என்று கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றம் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டார். இவ்வழக்கில் மனுதாரர் தொ.த.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். தொ.த.சா.ஆ.1 முதல் தொ.த.சா.ஆ.22 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) இவ்வழக்கில் தீர்க்கக்கூடிய பிரச்சனை யாதெனில்,**

1. மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிர்வாகத்தால் நடத்தப்பட்ட உள்துறை விசாரணையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதா?
2. மனுதாரர் மீதான குற்றச்சாட்டின் பேரில் அளித்த பணி நீக்க உத்தரவு சரியா?
3. மனுதாரர் இவ்வழக்கில் கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா?

**<u>தீர்வு</u>**

**எழுவினா 1 முதல் 3**

**5**) மனுதாரர் எதிர்மனுதாரரிடம் Production பிரிவில் தொழிலாளியாக வேலை செய்து வந்ததாகவும், கடந்த 18.08.2022 தேதியில் எதிர்மனுதாரர் நிறுவனம் தற்காலிக பணி நீக்க உத்தரவை அளித்ததாகவும், அந்த உத்தரவில் திருத்தணி காவல் துறையினர் தேவகுமார் என்ற தொழிலாளி எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உள்ள உதிரி பாகங்களை வாகனத்தில் திருடி எடுத்து சென்ற போது அவரை மடக்கி பிடித்து விசாரித்ததில் மேற்படி திருட்டு குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதாகவும், மேற்படி தேவகுமார் என்பவரும் அவருடன் சென்ற மற்றவர்களும் கைது செய்யப்பட்டதாகவும், எதிர்மனுதாரர்

தரப்பில் இது குறித்து துறை பூர்வமான விசாரணை நடத்தப்பட்டபோது அங்கு விசாரித்த ஒரு நபர் கொடுத்த வாக்குமூலத்தில் இந்த மனுதாரரும் இந்த குற்ற சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக குறிப்பிட்டு அதன்படி மனுதாரரும் மோசடி கையாடல் போன்ற குற்றச்சாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டதாக சொல்லப்பட்டிருந்தது. இது குறித்து மனுதாரருக்கும் குற்றச்சாட்டு குறித்து விளக்கக் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால் மனுதாரரின் விளக்க கடிதத்தை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் உள்துறை விசாரணை நடத்தப்படும் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது. உள் துறை விசாரணை அதிகாரியாக ஓய்வு பெற்ற சிவில் நீதிபதி திரு.சுரேஷ் அவர்கள் நியமிக்கப்பட்டதாக தெரிவித்தது. அந்த விசாரணையானது முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட வேண்டுமென்று மனுதாரர் கடிதம் அனுப்பினார். ஆனால் விசாரணை நடைபெற்ற போது மனுதாரருக்கு தெரிந்த தமிழில் நடத்தாமல் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது என்றும் அதே போல் விசாரணை நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறும் என்ற விளக்கம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படாமல் இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு முரணான வகையில் நடத்தப்பட்ட நிலையில் மனுதாரர் தனது தரப்பு விளக்கத்தை அளிப்பதற்காக அனுமதிக்கப்படவில்லை என்றும் மனுதாரர் உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்ட போதும் விசாரணை அதிகாரி ஏற்றுக்கொள்ளாமல் ஒருதலைபட்சமாக தன்னுடைய விசாரணையை நடத்தி முடிவு அறிக்கை வழங்கினார் என்றும் அந்த முடிவு அறிக்கையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததன் பேரில் எதிர்மனுதாரர் 2வது காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதற்கு மனுதாரரும் விளக்க கடிதம் அளித்த போதும் ஏற்றுக்கொள்ளாமல் 12.11.2022 தேதியில் மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக உத்தரவு கொடுக்கப்பட்டதால் மேற்படி பணி நீக்கம் தண்டனை என்பது அதிகபட்சமானதும், தொழிலாளர் விரோத போக்குடன் நிர்வாகம் செயல்பட்ட காரணத்தினால் அந்த வேலை நீக்கம் அநியாயமானது என்றும் அதனால் மனுதாரரின் பணி நீக்கம் உத்தரவை ரத்து செய்து பணி தொடர்ச்சியுடன், பின் சம்பளம் மற்றும் இதர

பயன்களுடன் மீண்டும் எதிர்மனுதாரர் வேலை வழங்க உத்தரவிட வேண்டுமென்று மனுதாரர் தன்னுடைய தொழிற்தகராறு மனுவில் கூறியுள்ளார்.

6. எதிர்மனுதாரர் இந்த வழக்கில் அழைப்பாணை அனுப்பி சார்வு செய்யப்பட்ட போதும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாகப்பட்டுள்ளார்.

7. இவ்வழக்கில் மனுதாரர் தொ.த.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தின்படி மனுதாரர் உற்பத்தி பிரிவில் நிரந்தர தொழிலாளியாக வேலை செய்ததாக குறிப்பிட்டு அதற்கான பணி நிரந்தர உத்தரவு கடிதம் தொ.த.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு 18.08.2022 தேதியில் பணியிடை நீக்கம் உத்தரவுடன் குற்றப்பத்திரிக்கை கொடுத்ததாக குறிப்பிட்டு கொடுத்த அந்த கடித நகல் தொ.த.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இந்த குற்றச்சாட்டுகளுக்கு கொடுத்த விளக்க கடித நகல் தொ.த.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே போல் மனுதாரர் பணி நீக்க உத்தரவுக்கு ஆட்சேபித்து கொடுத்த பதில் கடித நகல் தொ.த.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரிடம் விளக்கம் கோரும் அறிவிப்பு நிர்வாகத்தால் அனுப்பப்பட்டதின் பேரில் மனுதாரர் அதற்கான விளக்க கடிதத்தை 05.09.2022 தேதியில் அனுப்பியுள்ளார். ஆனாலும் அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் உள்துறை விசாரணை நடத்த உள்ளதாக அறிவிப்பு 28.09.2022 தேதியில் அளிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிவிப்பு சம்மந்தமாக மனுதாரர் சில காரணங்களை குறிப்பிட்டு விளக்க கடிதம் கொடுத்துள்ளார். 30.09.2022 தேதியில் நடத்தப்பட்ட விசாரணையை ஆட்சேபித்து மனுதாரர் விசாரணை அதிகாரிக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் விசாரணை நடவடிக்கைகள் முறையாக செய்யப்படவில்லை என்றும் விசாரணையின் போது மனுதாரர் அனுப்பிய கடிதம் குறியீடு செய்யப்படவில்லை என்றும் அதனால் விசாரணை நடைமுறை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பாக நடைபெற்றதாக 10.10.2022 தேதியில் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார். அதே போல் சாட்சி விசாரணையின் போது

மனுதாரர் தரப்புக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் விசாரணை அதிகாரி இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பாக நடந்துக்கொண்டதாகவும் விசாரணை நடவடிக்கை குறிப்பு நகல் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டு 10.10.2022 தேதியில் மனுதாரர் ஒருஆட்சேபனை கடிதத்தை வழங்கியுள்ளார். ஆனால் இதையெல்லாம் கணக்கில் கொள்ளாத நிர்வாகம் விசாரணை நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்பட்டு விசாரணை அதிகாரி கொடுத்த முடிவு அறிக்கையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டதன் பேரில் 2வது காரணம் கோரும் அறிவிப்பு 01.11.2022 தேதியில் மனுதாரருக்கு நிர்வாகத்தால் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு 04.11.2022 தேதியில் மனுதாரர் பதில் கடிதம் அனுப்பியுள்ளார். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் 12.11.2022 தேதியிட்ட கடிதம் மூலமாக மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர் நிறுவனமானது கார்களுக்கான உதிரி பாகங்களை தயாரிக்கும் நிலையில் அந்த உதிரி பாகங்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு தேவகுமார் என்பவர் திருத்தணி அருகே செல்லும் போது காவல் துறையினரால் கைது செய்து விசாரிக்கப்பட்டதில் எதிர்மனுதாரர் நிறுவத்திலிருந்து திருடிய பொருட்களை எடுத்து சென்றதை ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டு மேற்படி தேவகுமார் மீதும் மேலும் மேகநாதன், பிரதீப், சரத்குமார் மற்றும் அர்ஜுன் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு 02.08.2022 தேதியில் ஆஜர்படுத்தியுள்ளார்கள். மேற்படி குற்றச்சாட்டு சம்பவம் குறித்து ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. Cr.No. 483/2022 பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைப்படி இந்த மனுதாரரின் பெயர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற பட்டியலில் குறிப்பிடப்படவில்லை. அதே போல் ஸ்ரீபெரும்புதூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட 5 குற்றம் சாட்டபட்டவர்களும் நீதிமன்றத்தில் ரீமேன்டு செய்யப்பட்டவர்களில் மனுதாரர் பெயர் காணப்படவில்லை. ஆனால் 18.08.2022

தேதியில் மனுதாரர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு அத்துடன் கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் மேற்படி திருட்டு குற்றச்சாட்டு சம்பவமானது போலீஸ் துறையால் நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்து நிர்வாகத்தின் தரப்பில் உள்துறை விசாரணையின் அடிப்படிடையிலும், அதில் ஒரு நபர் கொடுத்த வாக்குமூலத்தின்படி மனுதாரர் நீண்டகாலமாக மேற்படி திருட்டு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரியவந்ததால் நிர்வாகத்திற்கு இழப்பீடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் மனுதாரரும் இந்த குற்றச்சாட்டில் ஈடுபட்டார் என்று வாக்குமூலம் கொடுத்த நபர் யார் என்ற விவரம் குறிப்பிடவில்லை. மனுதாரர் அந்த குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்து 05.09.2022 தேதியில் கொடுத்த விளக்க கடிதத்தில் தான் எந்தவித ஒழுங்கீன செயலிலும் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

9. விசாரணை அதிகாரி முன்னிலையில் நடத்தப்பட்ட விசாரணையின் போது நிர்வாகத்தரப்பில் வனராஜ் மற்றும் பாக்கியராஜ் என்வர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். உள்துறை விசாரணையின் போது 8 தொழிலாளர்களுக்கு எதிராக கூட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இதில் விசாரணை அதிகாரி ஒவ்வொரு மனுதாரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. தேவகுமார் என்ற காவல் துறையினால் கைது செய்யப்பட்ட நபரையே குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக விசாரிக்கப்பட்டுள்ளார். உள்துறை விசாரணையின் போது மனுதாரரையும் சாட்சியாக விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் நிர்வாகத்தரப்பிலும் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்திருக்க வேண்டும். ஆனாலும் நிர்வாகத்தரப்பில் எந்த குறுக்கு விசாரணையும் செய்யப்படவில்லை. இது குறித்து மனுதாரர் தரப்பில் ஆட்சேபித்த நிலையிலும் உள்துறை விசாரணை முறையாக செய்யப்படவில்லை.

10. மனுதாரர் தரப்பில் 10.10.2022 தேதியில் விசாரணை அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதே போல் 15.10.2022 தேதியிலும் நிர்வாக அதிகாரிக்கு கடிதம் கொடுத்த பிறகும் விசாரணை அதிகாரி மனுதாரருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படாமல் அவசரமாக விசாரணை நடத்தி முடித்திருப்பதாகவும் மேலும் சாட்சியை விசாரிக்க

அனுமதி கேட்ட போதும் உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி கடிதத்திற்கு பிறகும் கூட உள்துறை விசாரணையில் மனுதாரரை சாட்சியாக விசாரிக்க விசாரணை அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விசாரணை நடவடிக்கைகள் தமிழில் நடத்தப்பட வேண்டுமென்று மனுதாரர் விசாரணை ஆரம்பத்திலும் 28.12.2022 கடித்திலும் அதே போல் மனுதாரருக்கு சக தொழிலாளியை உதவியாளராக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால் விசாரணையின் போது மனுதாரர் தனக்கு உதவியாக சக தொழிலாளியை வைத்துக்கொள்வதற்கான அனுமதி அளித்திருப்பதற்கான விவரம் காணப்படவில்லை. அதே போல் விசாரணையில் குறிப்பிட்ட ஆவணங்களும் விசாரணை நடவடிக்கை குறிப்புகளையும் அன்றைய தினமே மனுதாரருக்கு ஒரு நகல் எடுத்துக்கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்ட போதும் அவ்வாறு விசாரணை நடைபெற்ற போது மனுதாரருக்கும் நிர்வாகத்தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் நகல் விசாரணை நடவடிக்கைள் குறிப்புகள் நகல் உடனுக்குடன் வழங்கப்பட்டதாக காணப்படவில்லை.

11. விசாரணையில் மனுதாரர் நிர்வாகத்தை மேலும் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கேட்டபோதும் விசாரணை அதிகாரி மனுதாரருக்கு போதுமான வாய்ப்பு வழங்கப்படாமலும் மனுதாரரை சாட்சியமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் அவசரமாக விசாரணை நடவடிக்கைகள் முடித்துக்கொள்ளப்பட்டது என்றே மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவு சட்டத்திற்கு புறம்பானது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கும் போது அதனை மறுக்கும் வகையிலும் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்தும் அந்த குற்றச்சாட்டின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைள் முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டதா? என்பதை குறித்தும் தெரிவிப்பதற்கான ஆட்சேபனையை எதிர்மனுதாரர் இந்த வழக்கில் ஆஜராகி தெரிவிக்க முன் வரவில்லை. எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால்

ஒருதலைபட்சமாக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் தொ.த.சா.ஆ.1 முதல் தொ.த.சா.ஆ.22 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட வாதுரையில் விசாரணை முறையாக நடத்தப்படவில்லை என்பதினாலும், மனுதாரர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உள்துறை விசாரணையின் போது வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதாலும், விசாரணையின் போது விசாரிக்கப்பட்ட நிர்வாகத்தரப்பு சாட்சியிடமே முரண்பாடுகள் இருப்பதினாலும், மனுதாரர்களும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்பதாலும் குற்ற சம்பவத்திற்கு தொடர்புடையவர்கள் என்பது குறித்து நிரூபிக்கப்படாத நிலையில் காவல் துறையினர் விசாரணையின் போது மனுதாரர்கள் இந்த குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று வழக்கு பதிவு செய்யப்படாத போது இந்த மனுதாரர்கள் Works Committee-ல் உறுப்பினர்களாக இருப்பதினால் தொழிலாளர்களின் உரிமைக்கு குரல் கொடுப்பதால் நிர்வாகம் பழி வாங்க வேண்டுமென்று முடிவு செய்து பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி வேலை நீக்கம் என்ற தண்டனை அளிக்கப்பட்டிருப்பதாகவும், அவசரஅவசரமாக உள்துறை விசாரணை நடத்தி வேலை நீக்கம் என்ற தண்டனை அளித்திருப்பதால் இந்த தண்டனை தொழிலாளர் விரோத போக்குடன் நிர்வாகம் செயல்படுவதற்கான ஆதாரம் என்பதை மனுதாரர் தரப்பில் நிருப்பிக்கபட்டிருப்பதாகவும், அதனால் மனுதாரரின் வேலை நீக்க உத்தரவு சட்டவிரோதம் என்று அறிவித்து மீண்டும் வேலை வழங்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதர்வாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம்

**Civil Appeal No.6767/2013**

**Deepali Gundu Surwase /Vs/ Kranti Junior Adhyapak Mahavidyalaya and others** என்ற வழக்கில் அளித்த தீர்வினை மேற்கோள் காட்டி வாதுரை செய்யப்பட்டது.

12. உள்துறை விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையிலே மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனும் போது அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்ட மனுதாரரின் வேலை

நீக்கம் சட்டவிரோதம் என்று முடிவு காணப்பட வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

13. இவ்வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் சம்மந்தமாக நிர்வாகத்தால் நடத்தப்பட்ட உள்துறை விசாரணையின் போது நிரூபிக்கப்படவில்லை. அதே போல் அந்த உள்துறை விசாரணை முறையாகவும் இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டதாக தெரிய வரவில்லை. அந்த விசாரணை முடிவு அறிக்கை அடிப்படையில் அளிக்கப்பட்ட பணி நீக்க உத்தரவு சட்டவிரோதம் என்றே முடிவு செய்யப்படுகிறது. அந்த வகையில் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை 12.11.2022 தேதியில் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரர் இந்த வழக்கில் கோரியவாறு பணி நீக்க காலத்திலிருந்து மீண்டும் பணி வழங்கும் வரையில் பின் சம்பளம் பணி தொடர்ச்சியுடன் இதர பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்க எதிர்மனுதாரருக்கு உத்தரவு செய்யப்படுகிறது.

முடிவாக இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை 12.11.2022 தேதியில் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரர் இந்த வழக்கில் கோரியவாறு பணி நீக்க காலத்திலிருந்து மீண்டும் பணி வழங்கும் வரையில் பின் சம்பளம் பணி தொடர்ச்சியுடன் இதர பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்க எதிர்மனுதாரருக்கு உத்தரவு செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

**<u>மனுதாரர் / தொழிலாளர் தரப்பு சாட்சி:-</u>**

தொ.த.சா.1 D.உதயகுமார் (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.1 | 01.10.2010 | மனுதாரரை எதிர்மனுதாரர் நிர்வாகம் தகுதி காண் பருவ பயிற்சிக்காக நியமிக்கப்பட்டதற்கான கடித நகல். |
| தொ.த.சா.ஆ.2 | 01.04.2011 | நிர்வாகம் மனுதாரருக்கு வழங்கிய பணி நிரந்தர உத்தரவு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.3 | 18.08.2022 | நிர்வாகம் வழங்கிய குற்றப்பத்திரிகை மற்றும் பணியிடை நீக்க உத்தரவு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.4 | 20.08.2022 | நிர்வாகத்திற்கு மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.5 | 22.08.2022 | நிர்வாகத்திற்கு மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.6 | 01.09.2022 | நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த விளக்கம் கோரும் அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.7 | 05.09.2022 | நிர்வாகத்திற்கு மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.8 | 23.09.2022 | மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து உள்துறை விசாரணை நடத்துவதாக நிர்வாகம் அளித்த அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.9 | 28.09.2022 | விசாரணை அறிவிப்பு குறித்து மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.10 | 30.09.2022 | நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் ஆவணங்களின் நகல்கள். |
| தொ.த.சா.ஆ.11 | 03.10.2022 | விசாரணை அதிகாரிக்கு மனுதாரர் அனுப்பிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.12 | 10.10.2022 | விசாரணை அதிகாரிக்கு மனுதாரர் அனுப்பிய கடித நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.13 | 15.10.2022 | நிர்வாக அதிகாரிக்கு மனுதாரர் அனுப்பிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.14 | 01.11.2022 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய 2வது காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.15 | 04.11.2022 | நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல் |
| தொ.த.சா.ஆ.16 | 12.11.2022 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய பணி நீக்க கடித நகல் |
| தொ.த.சா.ஆ.17 | 16.11.2022 | சமரச அலுவலர் முன்பு தாக்கல் செய்த தொழிற்தாவா மனுவின் நகல். |
| தொ.த.சா.ஆ.18 | 08.12.2022 | நிர்வாகத்திற்கு கேட்பு வரைவோலையின் மூலம் மனுதாரருக்கு அனுப்பிய தொகையை திருப்பி அனுப்பியதற்கான கடித நகல் |
| தொ.த.சா.ஆ.19 | 13.12.2022 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.20 | 26.12.2022 | நிர்வாகம் மனுதாரருடைய தொழிற்தாவாவிற்கு தாக்கல் செய்த பதலுரையின் நகல். |
| தொ.த.சா.ஆ.21 | 28.12.2022 | நிர்வாகத்தின் பதிலுரைக்கு மனுதாரர் தாக்கல் செய்த மறுப்புரை நகல். |
| தொ.த.சா.ஆ.22 | 06.01.2023 | சமரச முறிவறிக்கை நகல். |

**எதிர்மனுதாரர்/நிர்வாகம் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.07.27 11:49:21 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.